5th November 1966] [திரு. ஆ. தங்கவேலு]

தலைவரவர்களே, இரண்டு நாட்களுக்கு முன்னால் ஏற்பட்ட கொடூரமான புயலின் காரணமாக திண்டிவனம் வட்டத்திலே பெருத்த சேதம் ஏற்பட்டிருப்பதோடு, விடூர் நீர்த்தேக்கம் உடைந்து மிகுந்த சேதம் ஏற்பட்டு அங்குள்ள விவசாயிகள், பொது மக்கள் மிகுந்த கஷ்டத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள். அவர்களுக்கு வசதிகளைச் செய்து கொடுக்கவும், நிவாரணம் உடனடியாக அளிக்கவும் இந்த விஷயத்தைப்பற்றி விவாதிப்பதற்கு இந்தச் சபையின் மற்ற நடவடிக்கைகளை ஒத்திவைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*கனம் திரு. எம். பக்தவத்சலம்: கனம் சபாநாயகர் அவர்களே, இந்தப் புயலினால் ஏற்பட்ட சேதங்கள், சென்னை நகரத்தில் மட்டுமல்ல, வேறு மாவட்டங்களிலும் இருக்கின்றன; தென் ஆற்காடு மாவட்டத்திலும் இருப்பதாகத் தகவல் வந்திருக்கிறது. அதிகாரிகள் இதிலே வேண்டிய கவனம் செலுத்திக் கொண்டு வருகிறார்கள். எத்தகைய நிவாரணம் அளிப்பதென்று நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இதைப்பற்றிய விரிவான அறிக்கை—எந்த, எந்த இடங்களிலே எத்தகைய நிவாரணங்கள் அளிக்கப்படுகின்றன என்பதைப்பற்றியெல்லாம் —7, 8 தேதியில் சமர்ப்பிக்கப்படும் என்று நேற்றே சொன்னேன். ஆகவே இப்பொழுது அதைப்பற்றி விவாதித்துப் பயன் இல்லை. மேலும் இது ஒத்திவைப்புப் பிரேரணைக்கு உரியதல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

MR. SPEAKER: A statement will be made within two days. So, consent is withheld.

(2) ESTABLISHMENT OF A STEEL PLANT AT SALEM

SRI M. KALYANASUNDARAM: Sir, I have given notice of two adjournment motions.

MR. SPEAKER: I do not think the hon. Member will press the adjournment motion regarding the Neyveli–Salem Steel Plant. A number of questions have been put on the subject during question hour to-day and the Ministers have answered them.

திரு. மீ. கலியாணசுந்தரம்: கேள்விகளிலிருந்து தகவல்கள் தான் கிடைத்தது. அந்தத் தகவல்களின் மேல் விவாதிப்பதற்குச் சந்தர்ப்பம் வேண்டும் . . .

MR. SPEAKER: Already the adjournment motion on the same matter given notice of by Sri S. Madhavan came up before the House two days ago.

திரு. மீ. கலியாணசுந்தரம்: இன்றைக்கு நிலைமை வேறு . . .

MR. SPEAKER: That is why I allowed fifteen minutes for the question.

திரு. மீ. கலியாணசுந்தரம்: திரு. மாதவன் அவர்கள் கொடுத்த நிலைமையிலிருந்து இப்பொழுது புதிய நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன. உருக்காலை போன்ற தொழில்வளத் திட்டங்களிலே அரசியலைப் பயன்படுத்தக்கூடாது என்பதுதான் நியாயம்.

[திரு. மீ. கலியாணசுந்தரம்] [5th November 1966

ஆனால் இப்பொழுது உருக்காலைத் திட்டத்திலே அரசியல் புகுத்தப்பட்டிருக்கின்றது. இப்பொழுது நான்காவது திட்டத்திலே உருக்காலை வருமா, நிதி நிலைமை அதற்கு இருக்குமா என்ற சந்தேகத்தில் இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். ஒரு மாகாணத்தில் கிளர்ச்சி செய்ததால் அங்கே கொடுத்துவிடுவதால் சேலத்தில் வரும் என்ற நம்பிக்கையும் போய்விடக்கூடிய நிலைமை ஏற்பட்டு, வேறு மாகாணத்திலே நடைபெறுகின்ற கிளர்ச்சிகளைப் பார்த்து தமிழ்நாட்டிலும் தவறான பிரதிபலிப்புகள் ஏற்பட்டு விடக்கூடாது என்ற வகையிலேதான் நான் இதை அவசரமாக விவாதிக்க வேண்டுமென்று கூறுகிறேன். திரு. மாதவன் அவர்கள் கொடுத்தது வேறு. இப்பொழுது சேலம் உருக்காலை சம்பந்தமாக மத்திய சர்க்கார் கொடுத்திருக்கக்கூடிய பதில் சந்தேகத்திற்கு இடமாக இருக்கிறது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அமைப்பதற்குச் சாத்தியமில்லை என்கிற முறையிலே பதில் இருக்கக்கூடிய காரணத்தினாலும் தொழில் அமைச்சர் அவர்களும், முதலமைச்சர் அவர்களும், சேலம் உருக்காலை சம்பந்தமாக நிபுணர்கள் வந்து ஆலோசித்துப் பார்த்து நிலைமை சாதகமாக இருக்கிறது என்று தெரிவித்திருக்கிறார்கள் என்று சொல்லியிருப்பதாலும் இதைப்பற்றி விவாதிக்க வேண்டுமென்பதற்காக நான் இந்தச் சபையினுடைய நடவடிக்கைகளை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

* கனம் திரு. எம். பக்தவத்சலம் கனம் சபாநாயகர் அவர்களே, கேள்வி நேரத்திலே நிலைமையை நானும் தொழில் அமைச்சர் அவர்களும் விளக்கியிருக்கிறோம். இதிலே மறுக்கப்பட்டிருப்பதாகச் சொல்வதற்கு ஒன்றுமில்லை. நிதி நிலைமையையொட்டி எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது என்றுதான் சொன்னார்கள். எனக்குத் தெரிந்த வரையில் இது மறுக்கப்படவில்லை என்றுதான் சொல்வேன். குடிநீர் திட்டம் என்ன என்று நிதி நிலைமையைப் பார்த்துச் செய்யலாம் என்றுதான் சொல்வேன். அதற்காக நான் மறுக்கிறேன் என்று சொல்வதற்கில்லை. குடிநீர் திட்டத்தை நான் ஒப்புக்கொள்ளவில்லை என்று சொல்வதற்கில்லை. பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறது. ஒருமுறை பத்திரிகையிலே ஒரு செய்தி வந்திருந்தது. நான் நேராகவே பிரதம மந்திரி அவர்களை அதைப்பற்றிக் கேட்டேன். அப்படி வந்தது தவறு, இதுமாதிரித்தான் இருக்கும் என்று அவர்கள் சொன்னார்கள். ஆகவே, பத்திரிகைச் செய்தியை வைத்துக்கொண்டு அதற்கு ஒரு அர்த்தம் வைத்துக்கொண்டு அதையொட்டி ஒத்திவைப்புப் பிரேரணை என்றால் அது ஒத்திவைப்புப் பிரேரணைக்கு உரியது அல்ல என்பதை நான் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

MR. SPEAKER: This is not a matter for an adjournment motion. So, I withhold my consent.